# மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

## HIGHER SECONDARY SECOND YEAR

## Unit 4 / கூட்டாண்மை கணக்குகள் - நற்பெயர் கணக்குப்பதிவியல்

### I சரியான விடையைத் தேர்வு செய்யவும்

1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
(அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து
(ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
(இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து
(ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

2. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்
(அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம்
(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்
(இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்
(ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

3. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாபவிகிதமாக கருதப்படுவது
(அ) சராசரி இலாபம் (ஆ) சாதாரண இலாப விகிதம்
(இ) எதிர்நோக்கும் இலாப விகிதம்
(ஈ) இவைகளில் ஏதுமில்லை

4. கீழ் வருவனவற்றில் எது சரியானது?
(அ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
(ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
(இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்
(ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்

5. சரியற்ற இணையினை அடையாளம் காணவும்
(அ) சராசரி இலாபமுறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
(ஆ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
(இ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு
(ஈ) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

6. சராசரி இலாபம் ரூ. 25,000 மற்றும் சாதாரண இலாபம் ரூ. 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்
(அ) ரூ. 25000 (ஆ) 10000 (இ) ரூ. 5000 (ஈ) 15000

7. 2017- ல் கணக்கேட்டின்படி இலாபம் ரூ 35,000;இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ. 1,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண நட்டம் ரூ 2,000 எனில் சரிக்கட்டப்பட்ட இலாபம்
(அ) ரூ. 36,000 (ஆ) ரூ. 35,000 (இ) ரூ. 38,000 (ஈ) ரூ. 34,000

8. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ரூ. 1,00,000; சொத்துகள் ரூ 1,50,000 மற்றும் பொறுப்புகள் ரூ 80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு
(அ) ரூ. 40,000 (ஆ) ரூ. 70,000 (இ) ரூ. 30,000 (ஈ) ரூ. 100,000

### மிகக் குறுகிய வினாக்கள்

1. நற்பெயர் என்றால் என்ன?
3. உயர் இலாபம் என்றால் என்ன?
5.கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.

### குறுகிய வினாக்கள்

1. நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஆறு காரணிகளைத் தரவும்.
3. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

#### 4.5 நற்பெயரின் வகைகள்

நற்பெயரை, வாங்கப்பட்ட நற்பெயர் மற்றும் தன்னுருவாக்க நற்பெயர் என வகைப்படுத்தலாம்.

உங்களுக்குத் தெரியுமா?

ஆண்டுத்தொகை என்பது தொடர்ச்சியான இடைவெளிகளில் தொடர்ந்து சீராக பெறப்படும் ரொக்க ஓட்டத்தைக் குறிக்கும். குறிப்பிட்ட ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஒரு குறிப்பிட்ட வட்டி வீதத்தில் ஒரு ரூபாயின் தற்போதைய மதிப்பை ஆண்டுத்தொகை அட்டவணை காண்பிக்கும். கீழ்க்கண்ட சூத்திரத்தைப் பயன்படுத்தி ஆண்டுத்தொகைக் காரணி கணக்கிடப்படுகிறது.

$$\text{ஆண்டுத்தொகை காரணி} = \frac{(1+i)^n - 1}{i(1+i)^n}$$

அதில், i = வட்டி வீதம்
n = எதிர்நோக்கும் ஆண்டுகள்

$$\text{வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு} = \frac{\text{சராசரி இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}} \times 100$$

பயன்படுத்தப்பட்ட முதல் = நிலைச் சொத்துகள் (நற்பெயர் தவிர) + நடப்புச் சொத்துகள் – நடப்புப் பொறுப்புகள்

#### எடுத்துக்காட்டு 2

ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு:
2015: ₹ 15,000; 2016: ₹ 17,000; 2017: ₹ 6,000 (நட்டம்); 2018: ₹ 14,000
4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

#### எடுத்துக்காட்டு 5

கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:
(அ) ஈட்டிய இலாபங்கள் : 2016: ₹ 30,000; 2017: ₹ 29,000 மற்றும் 2018: ₹ 32,000.
(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 3,000 சேர்ந்துள்ளது.
(இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹ 2,000 குறைக்கப்பட்டது.
(ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹ 5,600 என மதிப்பிடப்பட்டது.
3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important Questions upload soon.

மருதம் அகாடமி Youtube channel

தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

எடுத்துக்காட்டு 8

பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் : ₹ 1,20,000

(ஆ) சாதாரண இலாப விகிதம் : 20%

(இ) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம் :

2014: ₹ 30,000; 2015: ₹ 32,000; 2016: ₹ 35,000; 2017: ₹ 37,000 மற்றும் 2018: ₹ 40,000

(ஈ) கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹ 2,800.

4. ஸ்ரீதேவி நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து, 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 – ன் இலாபங்கள் முறையே ₹ 1,75,000, ₹ 1,50,000, மற்றும் ₹ 2,00,000

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 45,000 சேர்ந்துள்ளது.

(இ) 2017ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹ 30,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

8. ஒரு கூட்டாண்மை நிறுவனம் கடந்த மூன்று வருடங்களாக ஈட்டிய நிகர இலாபங்கள் பின்வருமாறு: 2016: ₹ 20,000; 2017: ₹ 17,000 மற்றும் 2018: ₹ 23,000.

மேற்குறிப்பிட்ட காலம் முழுவதும் நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 80,000. நிறுவனம் கொண்டுள்ள இடரினைக் கருத்தில் கொண்டு, பயன்படுத்தப்பட்ட முதல் மீதான சாதாரண இலாப வீதம் 15% என கருதப்பட்டது. உயர் இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

10. பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) சாதாரண இலாப விகிதம் 10%

(ஆ) கடந்த 4 ஆண்டுகளின் இலாபங்கள் ₹ 30,000, ₹ 40,000, ₹ 50,000 மற்றும் ₹ 45,000.

(இ) மேற்குறிப்பிட்ட இலாபம் ₹ 30,000 ல் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 3,000 சேர்ந்துள்ளது.

(ஈ) சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 3,00,000.

11. பின்வரும் தகவல்களிலிருந்து மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் காணவும்.

(அ) சராசரி இலாபம் ₹ 20,000

(ஆ) சாதாரண இலாப விகிதம் 10%

(இ) பயன்படுத்தப்பட்ட முதல் ₹ 1,50,000

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important Questions upload soon.

**மருதம் அகாடமி** Youtube channel

**தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (மருதம் ஆசிரியர்), அ.எண்: 96598 38789**

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy

www.Padasalai.Net

மருதம் அகாடமி YouTube Channel 9659838789

Subscribe: https://www.youtube.com/@Marutham_acadamy 10th to 12th important Questions upload soon.